பத்துப்பாட்டில் இசைக்கலைஞர்கள்

முனைவர் **செ.ரவிசங்கர்**
உதவிப்பேராசிரியர்
ஒப்பிலக்கியத்துறை
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625 021.

கு.சங்கவி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஒப்பிலக்கியத்துறை
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625 021

முன்னுரை

பத்துப்பாட்டு ஒரு பண்பாட்டுச் சுரங்கம் வரலாற்றுப் பெட்டகம் கலைகளின் இருப்பிடம். பாட்டும் தொகையும் என்று கூறும் மரபும் உண்டு. பாட்டு என்றாலே பத்துப்பாட்டைத்தான் குறிக்கும். அதற்குக் காரணம் சங்க காலத்தில் தோன்றிய நெடும்பாட்டுக்கள் இவை. பத்துப்பாட்டில் இசைக் கலைஞர்கள் பற்றி காண்போம்.

திறவுச்சொற்கள்: *இசை குழல் தண்ணுமை யாழ் பதலை*

இசைமரபு

இசையியல் என்னும் சொல் மியூசிக்காலஜி (அரளஉழடழபல) என்னும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல். ‘‘மியூசிக்காலஜி என்னும் ஆங்கில சொல் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கில அகராதிகளில் இடம் பெற்றது’’.[1] இது மொழியியல் நிலவியல்இ இறையியல் என்பன போன்ற ஆக்கம் பெற்ற சொல்.

இசைக் கலைஞர்கள்

கலை என்பது கற்றுக் கொள்வது. ஒருவர் மற்றவரிடம் கற்றுக்கொண்டு வளர்க்கும் ஒரு கலையே இசையாகும். கேட்போரை வயப்படுத்தி தன்வசம் இசையவைக்கும் ஆற்றல் வாய்ந்தது இக்கலையாகும். இசைப்பு இசையாகும் என்பது அது. இசையானது இசைக்கக் கூடியது என்பது அதன் பொருள் இதற்கு எடுத்துக்காட்டினைக் கூறவந்த இளம்பூரணர் ‘‘யாழிசை யூப்புக்கும்’’[2] என்று யாழில் இசைக்குரியோரையும் இசைக் கருவிகளை மீட்டுபவர்களைப் பற்றியும் தொல்காப்பியம் இசையைக் காட்டும் கூத்தர் பாணர் பொருநர் விறலி என்னும் நால்வர் பற்றிய குறிப்புக்கள் உண்டு. கிணையோர் வயிரியர் போன்ற கலைஞர்கள் கலையில் சிறந்தவர்களாவர்.

‘‘கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்’’[3] (தொல் - 630)

பாணர்

பாணர்கள் யாழிசைத்துப் பாடுவர்கள். பாண் என்றால் யாழ் பண் என்னும் இசையைத் தரும் கருவியைப் பாண் என்று நம்முன்னோர் அழைத்தனர். ஏர்க்களம் பாடுபவர் போர்க்களம் பாடுபவர் பரணி பாடுபவர் என்று பலர் உண்டு. யாழ் பாணர்இ இசைப் பாணர்இ மண்டைப்பாணர் என்று அழைக்கப்பட்டன.

‘‘கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க’’[4] (சிறுபாண்ஆற்றுப்படை – 35)

இடப்பக்கத்துத் தழுவி வைத்துள்ளான்இ பாடுதலில் வல்ல பாண்மகன்.

‘‘நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்’’[5] (சிறுபாண்ஆற்றுப்படை – 248)

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

போர்களத்திற்குப் பொருள் விரும்பி வந்தோர்க்கும்இ பாணர்க்கும் அவர் வறுமைத் துன்பத்தைப் போக்குகிறான்.

"பாணர் உவப்ப களிறுபல தரீ இ"[6] (மதுரைக்காஞ்சி -18)

பாடும் பாணர் மகிழக் களிறு பல தந்தனர்.

விறலியர்

திறமை பெற்ற பெண்பாற் கலைஞர். போர்ப் பாடல்கள் பாடுபவர்கள். பாடினி எனப்படுபவள் ஆடல்இ பாடலில் சிறந்த பெண்கள்.

"அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுமகள்"[7] (குறிஞ்சிப்பாட்டு – 193)

விழாக்காலங்களில் ஆடு களத்தில் ஒசையுடைய இசைக்கருவிகள் ஒலிக்கக்கழாய்க் கயிற்றில் ஆடுகின்ற மகள் தாளம் தவற ஆற்றாது தளருவது போல் தளர்ந்தது.

"ஒண் நுதல் விறலியர் பாணி தூங்க"[8] (பொருநர் ஆற்றுப்படை – 110)

சிறந்த யாழையும் இயக்கி விறலியரை இசைபடச் செய்துஇ அடச் செய்துஇ கள்ளும் தந்து எங்களை மகிழ்வித்தான்.

கூத்தர்

இவர்கள் கூத்தாடுதலைத் தொழிலாகக் கொண்டவர்கள். குறித்தல் கூத்து முழவும் பலவகை வாத்தியங்களையும் இசைத்து ஆடிப் பாடினர். ஆடுநர் என்றும் அழைக்கப்பட்டனர். இசைக்கருவிகளை பைகளில் கட்டிஇ கழையில் தொங்கவிட்டுஇ தோளில் சுமந்து சென்றனர்.

"விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து
இலங்குவளை விறலியர்"[9] (மலைபடுகடாம் - 45)

விறலியர் மயில் தோகை போன்ற கூந்தலைத் தாழ்த்து அசைத்து நடக்கின்ற விறலியர் மானொடு மாறுபட்ட சிவந்த கோடுகளையுடைய கண்ணினர் விளங்குகின்ற வளையலையுடைய விறலியர்.

பொருநர்

தடாரிஇ கிணை முதலிய தோற் கருவிகளுடன் பாடுபவர் போர்க்களம்இ பாடுவோர்இ ஏர்களம் பாடுவோாஇ பரணி பாடுவோர் எனப் பல பிரிவினர் உண்டு.

"வேறுபுலம் முன்னிய விரகு அறி பொருந!" [10](பொருநர் ஆற்றுப்படை – 3)

முடிந்த பின்பு அங்குள்ள சோற்றினை உண்ண விரும்பாது வேறு இடத்திற்குச் செல்ல விரும்பிய திறமை உடைய வழிவகை தெரிந்த பொருநனே.

"முழவுத்தோள் முரண்பொருநர்க்கு" [11](மதுரைக்காஞ்சி – 99)

முழவு போன்ற தோளினையுடைய கல்வியால் மாறுபட்ட தாடரிப் பறைகொட்டும் பொருநர்.

பாடினி

பாடினி என்பவள் பாடும் தொழிலை மேற்கொண்டவள் பாணனுடன் மன்னர்களைக் காணச் சென்று கலையை வெளிப்படுத்துவளாக பாடினி விளங்கினாள்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

"பெடைமயில் உருவின்இ பெருந்தகு பாடினி"[12] (பொருநர் ஆற்றுப்படை – 47)

பாடினியின் கூந்தல் ஆற்றில் உள்ள கருமணல் போன்ற இருந்தது. நெறிபிறைபோன்று இருந்தது.

"பாடினி பாணிக்கு ஏற்ப நாள்தொறும்"[13] (பொருநர் - 48)

பாடினி பாடிய பாட்டின் தாளத்திற்கு ஏற்பக் காட்டில் உறைகின்ற தெயவமாகிய கொற்றவைக்குத் தம் கடன்களைச் செய்தனர்.

வயிரியர்

இக்கலைஞர் கையாண்ட இசைக் கருவியின் வழிவந்த பெயர் இது. கோடியரைப் போலவே வயிரியரும் முழவோடு தொடர்புடைய கலைஞர். மண்ணமை முழவோடு பண்ணமை யாழும் வயிரியர் பயின்ற இசைக் கருவிகள்.

"விழவின் ஆடும் வயிரியர் மடிய"[14] (மதுரைக்காஞ்சி – 628)

திருவிழாவில் ஆடும் கூந்தர்களும் உறங்குகின்றனர். ஒலி அவிந்து அடங்கிக் கடல் போல் மக்கள் பாதி இரவில் உறங்கினர்.

"மான விறல்வேள் வயிரியம் எனினே"[15] (மலைபடுகடாம் - 164)

அங்குப் பகைவரைப் பொறாமல் பொரும் போரினையும் வெற்றி பெறும் முயற்சியையும் மானத்தையும் வெற்றியையும் உடைய நன்னனது கூத்தரேம் என்று சொல்லுங்கள்.

கிணையர்

குறமக்கள் மதங்கொண்டு வரும்யானையை விரட்ட அம்பு எய்தும் கவன் எறிந்தும் கிணைப்பறை தட்டியும் விரட்டுவர்.

"முனிவு இகந் திருந்த முதுவாய் இரவல"[16] (சிறுபாண்ஆற்றுப்படை -40)

பாணன் வழிப்படுத்த எண்ணி வருத்தம் நீங்கி இருக்கின்ற பேரறிவு வாய்ந்த இரவனே!

"அளியன் தானே முதுவாய் இரவலன்"[17] (திருமுருகாற்றுப்படை – 283)

இந்த முதியவன் நும்மைநோக்கி வந்துள்ளவன். இரங்குவதற் குரியவன்.

இசைக் கருவிகள்

இசைப் பாட்டிற்கும் பரத நாட்டியம் கூத்து முதலியவற்றிற்கும் இசைக் கருவிகள் (பக்க வாத்தியங்கள்) இன்றியமையாதவை. அவற்றைபற்றிக் கூறுவோம்.

இசைக்கு உரிய ஓசைகள் ஐந்து பொருள்களில் உண்டாகின்றன. அப்பொருள்கள் தோல்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடறு (கழுத்து) என்பன. முதலில் தோல் கருவிகளைக் கூறுவோம். தோல் கருவிகள் மரத்தினால் செய்யப்பட்டுத் தோலால் கட்டப்பட்டவை.

இசைக் கருவி: யாழ் மத்தளம் குழல் தடாரி பதலை தண்ணுமை போன்ற கருவிகளை விளக்கமாக காண்போம்.

யாழ்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

இது மிகப் பழைமையான இசைக்கருவி உலகத்திலே பல நாடுகளில் ஆதிகாலத்தில் வழங்கிவந்தது. ஒரு காலத்தில் இந்தியா தேசம் முழுவதும் இக்கருவி வழங்கி வந்தது. இக்கருவி பெரிதும் பாராட்டிக் கூறப்படுகிறது. பழந்தமிழர்களால் மிகச் சிறந்த இசைக் கருவியாகப் போற்றப்பட்டது. யாழ் இசைக் கருவியாகப் பாணர்கள் பயன்படுத்தினர்.

மத்தளம்

இதற்குத் தன்னுமை என்னும் மிருதங்கம் பெயர்கள் உள்ளன. மத்து என்பது ஓசைப் பெயர். தளம் என்பது இசையிடனாகிய கருவிகளுக்கெல்லாம் தளமாக இருப்பது ஆதலால் மத்தளம் என்று பெயர் பெற்றுது. வயிரியர் மத்தளத்தை வாசிக்கப்பட்டது.

குழல்

இதற்கு வங்கியம் என்றும் புல்லாங்குழல் என்றும் பெயர்கள் உண்டு. மூங்கிலினால் செய்யப்படுவது பற்றிப் புல்லாங்குழல் என்னும் பெயர் உண்டாயிற்று. ‘‘குழல் இனிது யாழ் இனிது’’[18] – என்று திருவள்ளுவர் கூறியது. இவ்வினிய இசைக்கருவி தனியே தனியிசையாகப் பக்க வாத்தியங்களுடன் கூத்தர்கள் வாசிக்கப்படுகிறது.

தடாரி

பொருநரின் இசைக்கருவிகள் இரண்டனுள் இதுவும் ஒன்று. இது கிணையினும் வேறுபட்டது. கிணை பெரிதாக இருக்கும். ‘‘தடாரி சிறிய அளவினது. கிணை ஒருமுகப் பறை தடாரி இருமுகப் பறை. உடுக்குப் போன்றது இது. ஆதித் துடியின் வளர்ச்சி நிலையான இசைக்கருவி தடாரி ஆகும்.’’[19] கிணையை நுண்கோல் கொண்டு தட்டுவர். தடாரியைக் கையாலேயே தட்டுவர். பொருநரால் தடாரி வாசிக்கப்படுகிறது.

பதலை

ப-தல் என்ற தாளகதியில் ஒலிக்கும் ஒருவகை முழவு பதலையாம். நொடிக்கும்போது சொ-டக்(ப-தல்) என நொடி வருமே அந்தப் பாணியில் இசைக்கப்படும் பறை இது. நொடி தரு பாணிய பதலையும் பிறவும் அரலைக் குன்றம் என்ற நாட்டின் அரசன் பதலை இசைப்பாணிக்கு வாரி வழக்கிய வள்ளல் என்பர். பதலை என்னும் கருவியை விறயவர்கள் பயன்படுத்தினர்.

தண்ணுமை

‘‘தண்ண என ஓசை தரும் மத்தளம் தண்ணுமை எனப்பட்டது. இது வாரால் விசித்துக் கட்டப்படும் போதே சரியான சுரம் தரும்.’’[20] விசியுறு தண்ணுமை. ஆறலைக் கள்வர்கள் தண்ணுமை ஓசை கோட்டால் காட்டு வழியில் செல்லும் வணிகச் சாத்தும் மக்களும் அஞ்சி நடுங்குவர். தண்ணுமை என்னும் கருவியை கிணையர்கள் பயன்படுத்தினர்.

வாழ்ககை முறை

கலைஞர்கள் வறுமையில் இருக்ககும் மற்றொரு கலைஞர்களின் வறுமை நீங்க அவர்களை ஆற்றுப்படுத்துகிறான். வேறு வறுமையால் வருந்தும் துன்புற்ற உன் சுற்றத்தார் பசியும் துன்பமும் நீங்க வேண்டின் நான் சொல்லும் இடத்திதற்குத் தாமதியாமல் உடனே செல்வாயாக. யானும் உன்னைப் போன்று வறிய நிலையில் இருந்தேன். கரிகால் பொருவளத்தானை நோக்கிச் சென்றேன். அண்னை வாயில் சென்று விடியற்காலத்தில் தடாரிப் பறையைக் கொட்டினேன். அவ்வோசையைக் கேட்ட கரிகால் பொருளத்தான் விரைந்து வந்து இனிய சொற்களைக் கூறி அன்போடு வரவேற்றான். என்னுடைய வேர்வையால் நனைந்து பல தையல்களோடு இருந்த பழைய கந்தல் ஆடையை நீக்கிக் கண்ணுக்குப் புலப்படாத நுண்மையான மெல்லிய ஆடைகளைக் கொடுத்து உடுத்துச் செய்தான். அவன் இனிய உணவுகளைத் தந்து மகழ்ச்சியடையச் செய்தான். நாங்கள் அங்கு தங்கினோம். நாங்க செல்ல விடை தருக என்று வேண்டினோம். வறுமை நீங்க பரிசுப் பொருள்களைக் கொடுத்து வழி அனுப்பினான். வறுமையில் இருந்த கலைஞர்கள் மகிழ்ச்சியுடன் தங்களது ஊருக்கு புறப்பட்டனர்.

முடிவுரை

சங்க கால கலைஞர்கள் கலைகளில் சிறந்தவர்கள். அவர்கள் கலைத்திறன் மிக்கவர்கள் ஆவர். கலைச்சிறப்பு மற்றும் இசைக்கருவியை பயன்படுத்திய கலைஞர்களின் வறுமை நீங்க அரசர்களாலும்

வள்ளல்களாலும் ஆதரிக்கப்பட்டு இசைக்லைகளை ஆவர்களால் வளர்க்கப்பட்டதை இக்கட்டுரையில் காண முடிகிறது.

சான்றெண் விளக்கம்

[1] டாக்டர் வீ.ப.கா.சுந்தரனார் பழந்தமிழ்லக்கியத்தில் இசையியல் ப-1
[2] முனைவர் இ.அங்கயறகண்ணி இலக்கியத்தில் இசைக்கூறுகள் ப-2
[3] ச.சுபாஷ்சந்ரபோஸ் தொல்காப்பியம் ப-64
[4] மேலது ப-167
[5] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மலைபடுகடாம் ப-40
[6] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மதுரைக்காஞ்சி ப-497
[7] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் குறிஞ்சிப்பாட்டு ப-410
[8] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் பொருநர் ஆற்றுப்படை ப-123
[9] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மலைபடுகடாம் ப-497
[10] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் பொருநர் ஆற்றுப்படை ப-115
[11] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மதுரைக்காஞ்சி ப-295
[12] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் பொருநர் ஆற்றுப்படை ப-118
[13] மேலது ப-119
[14] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மதுரைக்காஞ்சி ப-333
[15] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் மலைபடுகடாம் ப-507
[16] வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் சிறுபாண் ஆற்றுப்படை ப-151
[17] ச.வே.சுப்பிரமணியம் சங்க இலக்கியம் சிறுபாண் ஆற்றுப்படை ப-285
[18] மயிலை சீனிவேங்கிடசாமி தமிழர் வளர்த்த அழக்கலைகள் ப-121
[19] முனைவர் வெ.மு.ஷாஜகான்கனி தமிழ் நாடகக் (குறுங்) கலைக்களஞ்சியம் ப-77
[20] மேலது ப-78

பார்வை நூல்

[1] டாக்டர் வீ.ப.கா.சுந்தரனார் பழந்தமிழ்லக்கியத்தில் இசையியல் சைவசிதநாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை 18
[2] .முனைவர் இ.அங்கயறகண்ணி இலக்கியத்தில் இசைக்கூறுகள் இசைத்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 613 005
[3] ச.சுபாஷ்சந்ரபோஸ் தொல்காப்பியம் (பொருள்) நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட் தஞ்சாவூர் 613 001
[4] ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு சிறுபாண் ஆற்றுப்கடை மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600108
[5] ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மதுரைக்காஞ்சி மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600108
[6] ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு குறிஞ்சிபாட்டு மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600108
[7] ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு பொருநர் ஆற்றுப்படை மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600108
[8] ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மலைபடுகடாம் மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600108
[9] ச.வே.சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு திருமுருகாற்றுப்படை மணிவாசகர் பதிப்பகம் சென்னை 600108
[10] மயிலைல சீனி வேங்கிடசாமி தமிழர் வளர்த்த அழக்கலைகள் பூம்புகார் பதிப்பகம் சென்னை 60018
[11] முனைவர் வெ.மு.ஷாஜகான்கனி தமிழ் நாடகக் (குறுங்) கலைக்களஞ்சியம் தமிழ் உயராய்வு மையம் யாதவர் கல்லூரி மதுரை 625014

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்